தமிழ்Mirror
www.tamilmirror.lk
TUESDAY, AUGUST 01, 2024
வியாழக்கிழமை ஆகஸ்ட் 01, 2024 | ஒளி: 10 கதிர் 019 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலான

# “மொட்டின் முடிவை ஏற்கவே முடியாது”





ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மனசாட்சி உள்ளவர்கள் என்றவகையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பெரமுனவின் தலைவரான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு, கடிதமொன்றை புதன்கிழமை (31) அனுப்பிவைத்துள்ளார்.

அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

என் மனசாட்சிப்படி அந்த முடிவில் எனக்கு உடன்பாடு இல்லை. அந்த முடிவுக்காக உங்களால் தூண்டப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் உங்கள் மீதும் கட்சி மீதும் கொண்ட அன்பினால் தூண்டப்படவில்லை.

எனவே, ஜனாதிபதி அவர்கள், மனசாட்சி உள்ளவர் என்ற வகையில், கட்சியின் முடிவை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக என்னை அர்ப்பணிக்கிறேன்.

அந்த மனசாட்சிக்கு இணங்கத்தான் உங்களுக்காக நுகேகொடையில் ‘மஹிந்த காற்று ’ மேடையில் ஏறினேன். தற்போதைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நியமிப்பதைத் தவிர எமது கட்சி உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கு வேறு வழியில்லை. தற்போது, ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் நியமிப்பதைத் தவிர, தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாடு முன்னேறுவதை நான் காணவில்லை. எனவே, அன்று மனசாட்சியுடன் உங்களுக்காக நின்றது போன்று நாட்டைப் பற்றி நினைத்து இன்று ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக நிற்கிறேன்.

இதன் மூலம் நான் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவை விட்டு வெளியேறுவேன் என்றோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியில் தஞ்சம் புகுவேன் என்றோ கூறவில்லை என்பதை வலியுறுத்துகிறேன்.

நான் இன்னும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினராகவே இருக்கின்றேன். நீங்கள் இன்னும் என் முன்மாதிரியான தலைவர். நீங்கள் நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ வாழ்த்துகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார். .



## எரிபொருளுக்கு தட்டுப்பாடு

மாதாந்த எரிபொருள் விலை திருத்தத்தின் பிரகாரம், ஜூலை 31 ஆம் திகதி நள்ளிரவு முதல் எரிபொருளின் விலை குறைக்கப்படுவது ஏன் யூகித்து, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் எரிபொருளை கொள்வனவு செய்யாத காரணத்தினால் நாடு முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### இஸ்மாயில் ஹனி படுகொலையின் எதிரொலி:

## மூன்று குழுக்களை நியமித்தார் ஜனாதிபதி



இரானில் ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனி படுகொலைச் செய்யப்பட்டதை அடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2




## உறவினர்கள் ஆர்ப்பாட்டம்

சண்முகம் தவசீலன்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு நீதி கோரி, முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியான போராட்டத்தில் கடந்த 2017 மார்ச் எட்டாம் திகதி முதல் ஈடுபட்டுவருகின்றனர்

அந்த வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்துக்கு அருகில் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டை புதன்கிழமை (31) காலை முன்னெடுத்தனர்

## தாய்ப்பாலூட்டல் வாரம் ஆரம்பம்



தாய்ப்பாலூட்டலை ஊக்குவிக்கவும், குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் ஆகஸ்ட் 1 முதல் 7ஆம் திகதி வரையிலான ஒரு

தொடர்ச்சி P2



## ‘ஜனாதிபதி சாரணர் பதக்கம்’

சாரணர் இயக்கம், கெடட் படைப் பிரிவு, இளைஞர் படையணி உள்ளிட்ட இளைஞர் அமைப்புகளை சகல வழிகளிலும் பலப்படுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு இளைஞர்களின் பரந்த பங்களிப்பைப் பெறுவதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## “92 பேரில் சிலர் நடிக்கின்றனர்”



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து யார் வெளியேறினாலும் கட்சியை விட்டு வாக்காளர்கள் வெளியேற மாட்டார்கள். மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர வேறு எவர் கட்சியை விட்டு வெளியேறினாலும் அவர்களால் வாக்குகளைப் பெற முடியாது என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, புதன்கிழமை (31) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## VFS விசா ஒப்பந்தத்துக்கு எதிராக TISL மனுத் தாக்கல்



இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்கு விசா வழங்குவதற்கான இலத்திரனியல் பயண அனுமதி முறையை (ETA) கையாளுவதற்கு தனியார் நிறுவனங்களைக் ஒப்பந்தம் செய்யும் போது அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் நடைமுறை மீறல்கள் மற்றும் பொது மக்களின் நம்பிக்கையை துஷ்பிரயோகம் செய்வதற்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை ஜூலை 30 ஆம் திகதி தாக்கல் செய்தது.

சுற்றுலாத்துறை, தேசிய பொருளாதாரம் மற்றும் தேசியப் பாதுகாப்பை பாதிக்கும் வகையில் முடிவெடுப்பது மற்றும் கொள்முதல் செயல்முறைகளில் வெளிப்படைத் தன்மை இன்மை மற்றும்

தொடர்ச்சி P2



## கனடா செல்ல இருந்தவர் கழுத்து நெரித்து கொலை

சண்முகம் தவசீலன்

வவுனிக்குளத்தில் இருந்து புதன்கிழமை (30) சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு யோகபுரம் மல்லாவி பகுதியை சேர்ந்த ஆனந்தராசா ஜீவன் (வயது 27) என்ற இளைஞன் வவுனிக்குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார் கனடா செல்வதற்கு தயாராக இருந்த இந்த இளைஞன், சுமார் இருபது இலட்சம் ரூபாய் பணத்துடன் யோக புரத்தில் திங்கட்கிழமை (29) இரவு பாண்டியன் குளம் சென்றிருந்தார்.

எனினும், அவரை காணவில்லை. உறவினர்கள் அவரை தேடிய நிலையில் வவுனிக்குளம் குளத்தில் இருந்து செவ்வாய்க்கிழமை (30) சடலமாக மீட்கப்பட்டார். இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்து உடலத்தை பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ். ஏச்.மக்ருன்ஸ், சடலத்தை உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார் இந்நிலையில், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உடற்கூற்று பரிசோதனை இடம்பெற்றது. உடற்கூற்று பரிசோதனையின் முடிவில் குறித்த இளைஞன் கழுத்து நெரித்து கொல்லப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது சம்பவம் தொடர்பில் நட்டாங்கண்டல் பொலிஸார்


## ஆயுதங்களுடன் மௌலவி மாட்டினார்

க.சரவணன்



மட்டக்களப்பு மாஞ்சோலை பிரதேசத்தில் மௌலவி ஒருவர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதிக்கு எதிராக முறைப்பாடு

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சி உறுப்பினர்களை குழுவை ஜனாதிபதி செயலகத்திற்கு வரவழைத்து ஆதரவு கோரியமை தொடர்பில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பிலேயே இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச சொத்துக்கள் தவறாக பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த முறைப்பாடு கூறுகிறது.

புதிய சுதந்திர முன்னணியின் தலைவரினால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



## சஜித் சார்பில் கட்டுப்பணம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மூன்று குழுக்களை நியமித்தார் ஜனாதிபதி

படுகொலை செய்யப்பட்டுள்ள நிலையில், ஈரான் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் உலகில் ஏற்படக் கூடிய நிலைமையினால் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்தே கவனம் செலுத்தியுள்ளார்.

இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதுகாப்பு, பொருளாதார பாதிப்புக்களை எதிர்கொள்வதற்கான முன் ஆயத்தமாக தேசிய பாதுகாப்பு தொடர்பான குழுவையும், பொருளாதாரம் தொடர்பான குழுவையும், இவற்றைக் கண்காணிக்க உயர் மட்டக் குழுவையும் நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் இஸ்மாயில் ஹனியே தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார்.

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு

இந்நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்தியதன் பின்னர் எரிபொருள் விலை ஜூலை 31ஆம் திகதி திருத்தப்படாது எனவும் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்படாது என எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், எரிபொருள் விலை திருத்தம் ஜூலை 31 இரவு இடம்பெறும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. மாதாந்த எரிபொருள் திருத்தத்தின் படி இந்த திருத்தம் இடம்பெறும் என அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# ஆயுதங்களுடன் மௌலவி மாட்டினார்

பொலன்னறுவை இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் T.56 துப்பாக்கிகள் இரண்டு, அறுபது தோட்டாக்கள், இரண்டு மகசீன்கள், ஒரு பைனாகுலர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை ஏற்றிச் சென்ற நிலையிலேயே கைது செய்யப்பட்டுள்ளதாக அரலகங்வில விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட மௌலவி ஓட்டமாவடி மாஞ்சோலை பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் கருவாடு வியாபாரத்தில் ஈடுபட்டவர் எனவும் விசாரணைகளை மேற்கொள்ளும் விசேட அதிரடிப்படையினர் தெரிவிக்கின்றனர்.

டி.56 துப்பாக்கியின் அறுபது ரவுண்டுகள் மற்றும் இரண்டு மகசீன்கள், பைனாகுலர் ஆகியவை உரப்பையில் போட்டு, தோட்டத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அதனை தோண்டி எடுத்து மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்டபோதே கைது செய்யப்பட்டுள்ளார்.

# தாய்ப்பாலூட்டல் வாரம் ஆரம்பம்

வாரம் சர்வதேச தாய்ப்பாலூட்டல் வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இதனையொட்டி சுகாதார அமைச்சினால் தாய்ப்பாலூட்டல் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து இந்த மதிப்பீடு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

கல்முனை பிராந்தியத்திலுள்ள குழந்தைப் பேறு இடம்பெறுகின்ற சகல வைத்தியசாலைகளிலும் இந்த மதிப்பீடு ஆரம்பிக்கப்பட இருப்பதனால் இது தொடர்பாக துறைசார்ந்த உத்தியோகத்தர்களை தெளிவூட்டும் வகையில் பயிற்சிக் கருத்தரங்கொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்றது.

இந்தப்பயிற்சிக் கருத்தரங்கில் கல்முனை பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆறு வைத்தியசாலைகளின் வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தாய்ப்பாலின் மகத்துவம், தாய்ப்பாலால் ஏற்படும் உடல், உள மற்றும் ஆத்மீக நன்மைகள், தாய்ப்பாலூட்டல் சம்பந்தமான சட்ட கோவைகள், தாய்- சேய் நேய வைத்தியசாலைக்குறிய 10 படிமுறைகள் எனும் தலைப்பில் விரிவுரையாற்றப்பட்டது. அத்துடன் குறித்த வேலைத்திட்டத்தினை இணையத்தின் ஊடாக மதிப்பீடு செய்வதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன், சிறுபிள்ளை வைத்திய நிபுணர் டொக்டர் எஸ்.என்.றொஷான்ந், டொக்டர் எப். எம்.ஏ.காதர், பிராந்திய தாய்சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்தியர் டொக்டர் எம்.எச்.றிஸ்பின், டொக்டர் ஏ.ஏ.யுரேன் இந்நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்டனர்.

குறித்த நிகழ்வானது சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்தினால் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஜனாதிபதி சாரணர் பதக்கம்’

அதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை அரசாங்கம் ஏற்கனவே ஒதுக்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி நாட்டின் எதிர்கால பயணத்திற்கு பரந்த பங்களிப்பைப் பெறுவது தனது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை (31) இடம்பெற்ற இலங்கை பெண் சாரணர் இயக்க உறுப்பினர்களுக்கு ‘ஜனாதிபதி பதக்கம் ‘ வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

சாரணர் இயக்க அங்கத்தவர் தொகையை 75,000 இல் இருந்து 150,000 வரை அதிகரிக்கத் தேவையான ஆதரவை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சாரணர் இயக்கம், கெடெட் படை, இளைஞர் படையணி உள்ளிட்ட இளைஞர் அமைப்புக்கள் ஊடாகவும் போதைப்பொருள் தடுப்பு வேலைத்திட்டத்திற்கு பெருமளவில் பங்களிக்க முடியும் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

# காஸ் போகும் வரை காத்திருந்த அமரர் ஊர்தி



ஆ.ரமேஷ்

நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நுவரெலியா- உடபுஸ்ஸல்லாவ பிரதான வீதியின் போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தது.

நுவரெலியா பொரலந்தை சிறிய நகரத்தில் அமைந்துள்ள லாப்கேஸ் நிறுவனத்திற்கு சமையல் எரிவாயு நிரப்பிய சிலிண்டர்களை ஏற்றி வந்த 40 அடி நீளம் கொண்ட பார ஊர்தி இயந்திர கோளாறு காரணமாக நடுவீதியில் நின்றமையால் இந்த போக்குவரத்து தடை ஏற்பட்டிருந்தது.

புதன்கிழமை (31) மாலை மூன்று மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தின் காரணமாக பொரலந்தை சிறிய நகர பகுதியில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

அதே நேரத்தில் நுவரெலியா தொடக்கம் கந்தப்பளை,இராகலை ,வலப்பனை, உடப்புசல்லாவ நோக்கி பயணிக்கும், வாகனங்களும் ,உடபுஸ்ஸல்லாவ தொடக்கம் நுவரெலியா நோக்கி பயணிக்கும் வாகனங்களும் பொரலந்தை பகுதியில் நீண்ட வரிசையில் நீண்ட நேரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

இந்த வாகன கோளாறு காரணமாக நுவரெலியா- உடபுஸ்ஸல்லாவ பிரதான வீதியில் சுமார் இரு திசைகளிலும் சுமார் ஒன்றரை கிலோ மீட்டருக்கு அதிகமான தூரம் வாகனங்கள் நிறுத்தப்பட்டு போக்குவரத்திற்கு பாரிய பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

மேலும் இந்த பாரிய வாகன போக்குவரத்து தடை காரணமாக கந்தப்பளை பகுதியிலிருந்து ஆவா எளிய பொது மயானத்திற்கு கொண்டு செல்லப்பட்ட பூதவுடல் ஏந்திய மலர்ச்சாலை ஊர்தி வாகனம் பொரலந்தை நகரத்தைக் கடந்து செல்ல முடியாது நிறுத்தப்பட்டிருந்தது.

அதேபோல் வலப்பனை நீதிமன்றத்திலிருந்து நுவரெலியா சிறைச்சாலைக்கு கைதிகளுடன் வருகை தந்த சிறைச்சாலை வானமும் வீதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இப் பிரதான வீதி ஊடாக பல பிரதேசங்களில் இருந்து நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு புதன்கிழமை (31) மாலை வருகை தந்தவர்களும் வாகன போக்குவரத்து தடை காரணமாக பாதிக்கப்பட்டிருந்தனர்

# VFS விசா ஒப்பந்தத்துக்கு எதிராக TISL மனுத் தாக்கல்

ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, பொது நலன் கருதி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசியலமைப்பின் 12(1) மற்றும் 14A ஆகிய பிரிவுகளின் கீழ் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள சமத்துவத்திற்கான குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் தகவல் அறியும் உரிமை பிரதிவாதிகளின் செயல்கள் மற்றும் புறக்கணிப்புகளால் மீறப்பட்டுள்ளதாக மனுதாரர்கள் வாதிடுகின்றனர்.

இந்த மனுவில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், இலங்கை சுற்றுலா மேம்பாட்டு ஆணையகம், GBS Technology Services & IVS Global- FZCO, VFS VF Worldiide Holdings LTD, அமைச்சரவை மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைக்கு காரணமான சில முதன்மை பிரச்சினைகள் மனுவில் பட்டியலிடப்பட்டுள்ளன.

1. விசா வழங்கும் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட முகவர்களாக பணியாற்றுவதற்கு தனியார் நிறுவனங்களின் பொருத்தமற்ற மற்றும் ஒழுங்கற்ற தேர்வு.

2. சுற்றுலாத் துறைக்கு தீங்கு விளைவிக்கும் மற்றும் கணிசமான நிதி இழப்புகளை ஏற்படுத்தக்கூடிய தனியார் தரப்பினருடன் ஒப்பந்தங்களை செய்தல்.

3. 2024 மே மாதம் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடந்த ஒரு சம்பவத்தின் மூலம் விசா செயலாக்கத்திற்கு வணிக அமைப்புகளின் முறையற்ற நியமனம் வெளிச்சத்திற்கு வந்தது.


4. 2012 ஆம் ஆண்டு முதல், Mobitel (Pvt) Limited உடனான தற்போதைய கூட்டுறவு, குறிப்பிடத்தக்க செயலிழப்புகள், மோசமான செய்திகள், தரவு மீறல்கள் அல்லது பிற குறைகளை சந்திக்காமல், எந்தவித அசம்பாவிதமும் இன்றி செயல்பட்டு வருகிறது

5. ஆகஸ்ட் 2023 இல் Mobitel (Pvt) Limited, இலத்திரனியல் பயண அங்கீகார (ETA) முறையை மேம்படுத்துவதற்காக முன்மொழிவுகளை அரசாங்கத்திற்கு எந்த விதமான செலவும் இல்லாதவாறு முன்வைத்தது.

6. Mobitel (Pvt) Limited ஆனது GBS Technology Services & IVS Global- FZCO மற்றும் VFS VF Worldiide Holdings LTD ஆகியவற்றால் வசூலிக்கப்படும் 18.50 அமெரிக்க டொலர்களுக்கு முற்றிலும் மாறாக, ஒரு பயன்பாட்டிற்காக 1 அமெரிக்க டொலருக்கு இலத்திரனியல் பயண அங்கீகார (ETA) முறையின் இயங்குதள சேவைகளை வழங்குவதற்கான திட்டத்தை ஒப்பந்தம் செய்கிறது.

கொள்முதல் செயல்பாட்டின் போது பிரதிவாதிகள் தங்கள் சட்டவிரோத, தன்னிச்சையான மற்றும் நியாயமற்ற செயல்கள் அல்லது செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்று மனு வலியுறுத்துகிறது.

# “ சாதகமான எதிர்காலத்துக்கு சக்திகளை ஒன்று திரட்டினோம்”



சுற்றுப்புற பிரதேசங்களில் ரணில் ஜனாதிபதி என்று போஸ்டர் ஒட்டி இருக்கிறார்கள். நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் அது செப்டம்பர் 21 ஆம் திகதி மாத்திரமே ஆகும்.. நிச்சயமாக தோழர் அநுர குமார திசாநாயக்க தேர்தலில் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவார் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவையின் உறுப்பினர் மௌலவி முனீர் முலஃப்பர் தெரிவித்தார். .

“ஒன்றாக வெற்றி பெறுவோம்” என்று போராட்டக் கோஷத்தை தொடங்கியிருக்கிறார்கள். அந்த வெற்றி எவருக்காக? இந்த நாட்டு மக்களுக்கு அல்ல. அது அவர்களின் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு. மக்களின் வெற்றி இருப்பது தேசிய மக்கள் சக்தியிடம் மாத்திரமே என்பதை வலியுறுத்தி கூற விரும்புகிறேன் என்றார்.

தேசிய மக்கள் சக்தியின் கூட்டம் புத்தளத்தில், ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# “92 பேரில் சிலர் நடிக்கின்றனர்”

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 92 உறுப்பினர்கள் கட்சியின் தீர்மானத்தை எதிர்க்கவில்லை. இந்தக் குழுவில் சிலர் இன்னமும் நடிக்கின்றனர் என்றும் பெர்னாண்டோ கூறினார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு வழங்கிய விசேட செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தற்போது ஆதரவளிக்கும் நபர்கள், மஹிந்த ராஜபக்ஷவின் புகைப்படத்தை ஏந்தியவாறு பாராளுமன்றத்துக்கு வந்தவர்கள். இவ்வாறானவர்கள், கிராமங்களுக்குச் சென்று மஹிந்தவை பிரதமராக்குங்கள் என வாக்குக் கேட்டவர்கள் என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கி, மஹிந்த ராஜபக்ஷவிடம் இருக்கிறது. கட்சியை விட்டு சென்றவர்களுக்கு 200 அல்லது 500 இன்றேல் 1,000 வாக்குகள் மட்டுமே கிடைக்கும் என்றார்.

கட்சியை விட்டு சென்றவர்கள் எக் காரணத்துக்காக விட்டுச் சென்றனர் என்பது மக்களுக்குத் தெரியும். ரணிலுக்கு ஆதரவளிக்கச் சென்றவர்கள், ஐக்கிய மக்கள் சக்திக்கும் செல்வர் என்றார்.

# சஜித் சார்பில் கட்டுப்பணம்

அலுவலகத்தில் இன்று(31) முற்பகல் ஐக்கிய மக்கள் சக்தியின் கட்சியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எஸ். எம். மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் ஆகியோரே கட்டுப்பணம் செலுத்தினர்.

இதற்கமைய இம்முறை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக இதுவரை 5 பேர் சார்பில் கட்டுப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# ரணிலுக்கு உதவும் மொட்டுகளுக்கு ஆபத்து

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனி வேட்பாளரை முன்வைக்கும் தீர்மானத்திற்கு எதிராக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உதவி செய்யும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் பதவியில் இருந்து நீக்குவதற்கு அக்கட்சி தீர்மானித்துள்ளது.

கட்சியின் முடிவுக்கு எதிராக செயற்பட்டவர்கள் பதவிகள் மட்டுமன்றி ஆசன அமைப்பாளர் பதவிகளில் இருந்தும் நீக்கப்படுவார்கள். அதற்கான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து தகவல்களும் ஆய்வு செய்யப்பட்டு வருவதாக அக்கட்சியின் மூத்த செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்காமல் தனி வேட்பாளரை முன்வைக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் குழு கடந்த 22ஆம் திகதி தீர்மானித்தது.

அந்த தீர்மானத்தின் பின்னர் 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிப்பதாக அறிவித்தனர்.

ஜனாதிபதி செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (30) இடம்பெற்ற ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தின் போதே அவர்கள் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளனர்.

உள்ளூராட்சி பிரதிநிதிகள் உட்பட பெரும்பான்மையான செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்க முடிவு.

இந்திய மீனவர்களில்


# 30 பேர் விடுதலை

இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களில் 23 பேர், செவ்வாய்க்கிழமை(30) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மூவருக்கு ஒருவருட சிறைத்தண்டணை வழங்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

Sea of Sri lanka கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 64 மீனவர்களின் வழக்கு விசாரணை ஊர்காவற்றுறை நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் செவ்வாய்க்கிழமை(30) இடம்பெற்றது.

ஜூன் 16 மற்றும் 22ஆம் திகதிகளில் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 26 மீனவர்களில் 23



பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூவர், இரண்டாவது தடவையாகவும் கைது செய்யப்பட்டுள்ளதால் அவர்களுக்கு 1 வருட சிறைத்தண்டனை விதித்து நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் விடுவிக்கப்பட்ட 23 பேரில் மூவர் படகு உரிமையாளர்கள் என்பதுடன், அவர்களுக்கு தலா 4 மில்லியன் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில், 6 மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும் என உத்தரவிடப்பட்டுள்ளது. அத்துடன் கைப்பற்றப்பட்ட 3 படகுகளும் அரசுடமையாக்கப்பட்டுள்ளன.

இதனை தவிர, கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட 25 மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 6ஆம் திகதி வரையும் கடந்த 11ஆம் திகதி கைது செய்யப்பட்ட 13 மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.



## இலவசமாக வழங்கி வைப்பு

■ பி.கேதீஸ்

தலவாக்கலை கிரேட்வெஸ்டன் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் சிலருக்கு பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத நிலையில் அவர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் டீ பீல்ட் நிறுவனத்தினூடாக இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டன.

இச்சான்றிதழ்களை டீ பீல்ட் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு முகாமையாளர் லசந்த வெலிகமே மற்றும் பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.பாரிஸ் மாணவர்களிடமும் பெற்றோரிடமும் வழங்கி வைத்தனர்.

## ‘ஐஸ்’ வியாபாரியும் பெண்ணும் கைது

■ கனகராசா சரவணன்

அம்பாறை, இறக்காமம் பிரதேசத்தில் 6 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் வியாபாரி ஒருவரும் பெண் ஒருவரும் செவ்வாய்க்கிழமை (30) இரவு கைது செய்யப்பட்டனர் என இறக்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அம்பாறை விசேட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் போதை பொருள் வியாபாரியின் வீட்டை சுற்றி வளைத்து சோதனையிட்டபோது வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவரை 6 கிராம் 300 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் கைது பொலிஸார் கைது செய்தனர்.

அதேவேளை 43 வயதுடைய பெண் ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



நல்லூர் கொடிச்சீலைக்கான

## காளாஞ்சி கையளிப்பு

■ எஸ். தில்லைநாதன்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவுக்கான கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்றது.

\வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன், பந்தல் கால் நாட்டுதல் நடைபெற்று, பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபு உடையவர்களுக்கான காளாஞ்சி மாட்டுவண்டி மூலம் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

நல்லூர் கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை (09) காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 25 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது.



## உறவுகளுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டம்

■ சண்முகம் தவசீலன்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், முல்லைத்தீவு நகர சுற்றுவட்டத்துக்கு அருகில் புதன்கிழமை (31) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்தனர்.

நீதி வேண்டும் என கோரி கோஷங்களை எழுப்பியவாறு குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



## தேர்த்திருவிழா

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை (03) காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

வியாழக்கிழமை (01) மாலை 4 மணியளவில் வேட்டை திருவிழாவும் வெள்ளிக்கிழமை (01) இரவு 7 மணியளவில் சப்பர திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை (04) காலை 9 மணியளவில் தீர்த்தத்திருவிழாவும், திங்கட்கிழமை (05) அன்று வைரவர் பொங்கலும் இடம்பெறவுள்ளது.



## “இணையத்தளம் ஊடாக வியாபார பதிவு”

■ எஸ்.தில்லைநாதன்

இணையத்தள மூடாக வியாபார பதிவுகளை (Online Business Registration) ஆரம்பிக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மற்றும் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் ஆளுநர் செயலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற விசேட கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சிறு தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோருக்கான வியாபார பதிவுகளை மேற்கொள்வதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன் கால தாமதமின்றி வியாபார பதிவுகளை முன்னெடுப்பதற்கு இணையதள பதிவு முறையை (Online Business Registration) அறிமுகப்படுத்துவது சிறந்த செயல்பாடு என தெரிவித்த ஆளுநர், வடக்கு மாகாணத்தில் அதற்கான செயற்பாட்டை துரிதகதியில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் கூறினார்.

அத்துடன் பொதுச்சேவைக்கான செயல்பாடுகளை டிஜிட்டல் மயப்படுத்துவது அவசியம் எனவும் தெரிவித்தார்,

விசேட தேவையுடையோர் பொதுச் சேவைகளை இலகுவில் அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் அமைக்கப்படுதல் வேண்டும் எனவும், அவர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சரிடம் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

இந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல், போக்குவரத்திற்கான பஸ்களை பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாகவும் விசேட தேவையுடையோர் இலகுவாக அணுகக்கூடிய வகையில் கட்டட நிர்மாணங்கள் மேற்கொள்ளாத பொது நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறினார்.

இதன்போது வெளிநாடுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர் அசுவெசும கொடுப்பனவை பெற்றுக்கொள்வதில் காணப்படும் இடையூறுகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதில் காணப்படும் சிக்கல்களை நிவர்த்திக்கும் நடவடிக்கை எடுப்பதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## சீன வலைகள் கையளிப்பு

■ நடராசா கிருஸ்ணகுமார்



வடக்கு கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் வீடு, அரிசி என்பவற்றை சீன அரசாங்கம், மீனவர்களுக்கு ஏற்கனவே வழங்கிய நிலையில் மற்றுமொரு உதவியாக வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள் புதன்கிழமை (31) அன்று கிளிநொச்சிக்கு கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்திற்கு குறித்த வலைகள் கொண்டுவரப்பட்டதுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் 1060 மீனவர்களுக்கு அவை வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## குளிக்கச் சென்றவர் சடலமாக மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - வில்பத்து தேசிய சரணாலயத்திற்கு முன்பாக உள்ள கலா ஓயாவுக்கு குளிக்கச் சென்ற, கல்நேவ பகுதியைச் சேர்ந்த எச்.எம். வசந்த பிரியதர்ஷன (வயது 47) சடலமாக செவ்வாய்க்கிழமை (30) மீட்கப்பட்டுள்ளார்.

அவருடன் நால்வர் சென்றிருந்த நிலையில், அவர்கள் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்ததாகவும் அங்கு இரண்டு குழுக்களுக்கு இடையே கைகலப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, ஒருவரை தவிர ஏனையவர்கள் அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுவிட்டனர். இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் அவரை தேடிச்சென்றபோது, சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



## ஹோட்டல்கள் சுற்றிவளைப்பு

### மூவருக்கு எதிராக வழக்கு

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மனித பாவனைக்கு உதவாத சமைத்த, உலர்த்திய உணவுப் பொருட்களை பொதுமக்களுக்கு விற்பனை செய்த ஹோட்டல்கள், உணவு விடுதிகள் சுற்றிவளைக்கப்பட்டது.

காத்தான்குடி மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் எம்.ஏ.எம்.பஷீர் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நகரசபை ஊழியர்கள், இணைந்து நடத்திய உணவகங்களின் மீதான திடீர் சோதனையை முன்னெடுத்தனர்.

இதன்போது, மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற முறையில் நோய் தொற்றை உண்டாக்க கூடியவாறு உணவை களஞ்சியப்படுத்தி விற்பனை செய்த உணவக உரிமையாளர்களிடம் இருந்து பெரும்தொகையான உணவுகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன், 3 பேருக்கு எதிராக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

# தாய்ப்பால் அருந்துவது குழந்தையின் உரிமையாகும்

ஆகஸ்ட் முதலாம் திகதி முதல், அதாவது இன்று (01) முதல் 7 நாட்களுக்கு உலக தாய்ப்பால் வாரம் அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த அவசர உலகில், பெரும்பாலான தாய்மார், தாய்ப்பால் ஊட்டுவதை தவிர்த்து வருகின்றனர். இல்லையேல், நவீன சாதனங்களைக் கொண்டு தாய்ப்பாலை முன்கூட்டியே எடுத்து, குளிர்சாதன பெட்டியில் வைத்து பதப்படுத்தி, தாய்ப்பால் மட்டும் குடிக்கும் குழந்தைகளுக்கு புகட்டுக்கின்றனர்.

உலகில் உள்ள அத்தனை பாலூட்டிகளும், இயற்கையாகவே தங்கள் சந்ததிக்கு போதுமான அளவுக்கு தாய்ப்பால் புகட்டுகின்றன. ஆனால், மனித இனத்தில் மட்டும், பல்வேறு காரணங்களால் போதிய அளவுக்கு தாய்ப்பால் புகட்டுவது தடைப்படுகிறது. விழிப்புணர்வு இன்மை பிரதானமாகும். தாய்ப்பால் அருந்துவது குழந்தையின் உரிமையாகும். அதற்காக போராட முடியாது. வீரிட்டு அழ மட்டுமே முடியும்.

தாய்ப்பால்தான் மனிதனின் முழு உடல் ஆரோக்கியத்தை இறுதி காலகட்டம் வரை தீர்மானிக்கிறது. உலக சுகாதார மையம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஓர் அங்கமாக திகழும் குழந்தைகள் நல கூட்டமைப்பு ஆகியன வெளியிட்ட ஆய்வு முடிவுப்படி, இளம் தாய்மார்களின் பால் சுரப்பு தன்மையின் அடிப்படையில் மூன்று மணி நேர இடைவெளியில் பால் புகட்டலாம்.

தாய்ப்பாலால் தாய் -சேய் இருவருக்கும் பலவிதமான நன்மைகள் ஏற்படும், தாய்ப்பாலூட்டல், பெண்களுக்குரிய உரிமை போன்றவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக இந்தச் சிறப்பு வாரம் அனுசரிக்கப்பட்டு வருகிறது.

தாய்மை அடைந்த பெண்கள் குழந்தை பெற்றவுடன் வெளிப்படும் சீம்பால் உட்பட, அதனைத் தொடர்ந்து சுரக்கும் பாலை சிசுவிற்கு கொடுப்பது அவசியம். சுகப்பிரசவம் என்றால் அரைமணி நேரம் கழித்தும், அறுவை சிகிச்சை மூலம் குழந்தை பிறந்து இருந்தால் இரண்டு மணி நேரத்துக்குப் பின்னர் பால் தரலாம்.

குழந்தைகளுக்கு முதல் ஆறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே உணவாக கொடுத்து வரலாம். பின்னர், மெல்ல மெல்ல எளிதில் செரிக்கக்கூடிய உணவுகளை தரலாம். தாய்ப்பால் கொடுப்பதால், தாய்-சேய் இடையே உறவுப் பிணைப்பு பலப்படுகிறது. பால் புகட்டும் நேரங்களில், குழந்தைகளை நெருக்கமாக அணைப்பதால் ஹார்மோன் அதிக அளவில் உற்பத்தியாகிறது. இதன் காரணமாக, தாய்ப்பால் சுரப்பும் தூண்டப்படுகிறது.

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு மலச்சிக்கல் போன்ற வயிறு தொடர்பான பிரச்சனைகள் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது. மழலைச் செல்வங்களுக்கு சீரான இடைவெளியில் பால் புகட்டுவது எவ்வளவு முக்கியமோ, அதைப்போன்று பால் கொடுக்கும் போது கையாளப்படும் முறையில் கவனமாக இருக்க வேண்டும். இளம் தாய்மார்கள் ஒரு பக்கம் ஒருக்களித்த நிலையில் படுத்தவாறு அல்லது தங்களுடைய, இரண்டு கால்களையும் மடித்தவாறு, சம்மண நிலையில் உட்கார்ந்து, மடிமீது குழந்தையைப் படுக்க வைத்தும் பால் புகட்டலாம். பால் புகட்டுவதால் உடல் ஆரோக்கியம், அழகு குறைந்துவிடும் என்ற கருத்து நிலவுகிறது. இது முற்றிலும் தவறான எண்ணம்.

மனச்சோர்வு, இதயம் தொடர்பான பிரச்சனைகள், மார்பகப் புற்றுநோய் ஆகிய பாதிப்புகளில் இருந்து தாய்ப்பால் வழங்கும் பெண்கள் பாதுகாக்க படுகிறார்கள் என மருத்துவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தாய்ப்பால் கொடுக்கும் அளவை அதிகரிப்பதன் மூலம் உலகளவில் எட்டு லட்சத்திற்கும் அதிகமான பச்சிளம் குழந்தைகளின் மரணம் தடுக்க படலாம் என ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சம் முழுமையாகப் பிரகாசிக்க, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் முழு உலகையும் அரவணைக்கும் அன்பு எனும் ஒளியைப் பாச்ச முயற்சி செய்க! இது கடினமானது இல்லை.

புன்னகை செய்து, விழிகள் மூலம் கருணையுடன் நோக்குக! எதிரிகளே இல்லாத நிலையில் வாழ்ந்திட முயலுங்கள்.

இயன்றளவு சாதாரண உதவிகளை பிறருக்குச் செய்யத் தயங்க வேண்டாம். எக்காரணம் கொண்டும், சூடான சொற்பதங்களைப் பிரயோகிக்க வேண்டாம்.

தமக்குப் பிடிக்காததை, மற்றொருவருக்குக் கொடுப்பது, நாகரிகமானது அல்ல! தானம் செய்யும்போது கூட, கழித்துவிடும் பொருட்களை வழங்கலாகாது.

பசித்தோருக்கு இயன்றவரை வழங்குவது மேலானது. உடலுக்கு உணவு வழங்குதல், ஒருவரின் ஆன்மாவுக்கே ஆறுதல் அளிப்பது போலாகும்.

எவரையும் நிராகரிக்க வேண்டாம். எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர்கள். யாவரும் செய்யும் சிறு கொடைகள், முழு உலகையும் உயர்த்தும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தோற்றவர்களும் களத்தில்

முருகானந்தம் தவம்

ஏற்கனவே நடந்த ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்டு ஒருமுறை கூட வெற்றிபெறாதவர்களும் ஒரே கட்சியை சேர்ந்தவர்களும் களமிறங்கி ஏனைய கட்சிகளை பிரித்து மேய்ந்து. ஆள்திரட்டி ஆதரவு பெற்று அரியணையை பிடிக்க நடக்கும் ஒரு தேர்தலாக எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தல் மாறிப்போயுள்ளது.

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடக்குமா நடக்காதா என்பது தொடர்பில் கடந்த சில மாதங்களாகவே நடந்து வந்த பெரும் விவாதப்போருக்கு மத்தியில் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள், தமது வேட்பு மனுக்களை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை ஜூலை 26 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கையில் நாடு முழுவதும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குபதிவு இடம்பெறவுள்ளது. இந்தத்தேர்தலில் ஒரு கோடியே 71 இலட்சம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். எதிர்வரும் செப்டம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் இதற்கு முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதித்தேர்தல்கள் தொடர்பில் ஒரு மீள் பார்வையை செலுத்துவோம்.

இலங்கையில் 1978 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம், கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளை தெரிவு செய்வதற்காக இதுவரை 8 ஜனாதிபதித் தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதன்படி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான முதலாவது தேர்தல் 1982-10-20 ஆம் திகதி நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ஜே.ஆர்.ஜெயவர்த்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து எச்.எஸ்.ஆர். பி. கொப்பேக்கடுவ, ஜே.வி பி.யிலிருந்து ரோஹன விஜே வீர,அகில இலங்கை தமிழ் காங்கிரஸிலிருந்து ஜீ.ஜீ. பொன்னம்பலம், லங்கா சமசமாஜக்கட்சியிலிருந்து கலாநிதி கொல்வின் சில்வா, நவசமாசமாஜக்கட்சியிலிருந்து வாசுதேவ நாணயக்கார ஆகியோர் களமிறங்கினர்.

இதில் ஜே .ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் கொப்பேக்கடுவவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் ஜெயவர்த்தன 34,50811வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, கொப்பேக்கடுவ 25,48439 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் ஜே .வி.பி. வேட்பாளரான ரோஹன விஜே வீர 2,73428 வாக்குகளையும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளரான ஜீ.ஜீ. பொன்னம்பலம் 1,73934 வாக்குகளையும் பெற்றிருந்தனர். இந்த தேர்தலில் 52.91 வீதம் வாக்குகள் பதிவாகியிருந்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான இரண்டாவது தேர்தல் 1988-12-19 ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ரணசிங்க பிரேமதாச ,ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க.

சிங்கள மக்கள் கட்சியிலிருந்து அபேகுணசேகர ஒஸ்வின் ஆகியோர் களமிறங்கினர். இதில் ரணசிங்க பிரேமதாசவுக்கும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் ரணசிங்க பிரேமதாச 25,69199 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க 22,89960வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 50.43 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான மூன்றாவது தேர்தல் 1994-11-09ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து காமினி திஸாநாயக்க, பொதுஜன முன்னணியிலிருந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கா உள்ளிட்ட 6 வேட்பாளர்கள் களமிறங்கினர் தேர்தல் களத்தில் காமினி திஸாநாயக்க கொல்லப்படவே அவரின் மனைவியான வஜிர ஸ்ரீமதி போட்டியிட்டார்.

வஜிர ஸ்ரீமதிக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கா 47,09205 வாக்குகளை ப்பெற்று வெற்றியடைய, வஜிர ஸ்ரீமதி 27,15705 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம் 62.28 ஆகப் பதிவானது

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான நான்காவது தேர்தல் 1999-12-21ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன முன்னணியிலிருந்து சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கா,ஜே ஸ்ரீ.வி.பி. யிலிருந்து நந்தன குணதிலக உள்ளிட்ட 13 வேட்பாளர்கள் களமிறங்கினர்.இதில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாதுங்கவுக்குமிடையில் போட்டி ஏற்பட்ட நிலையில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 43,12157வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, ரணில் விக்கிரமசிங்க 36,02748 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். ஜே .வி.பி.யிலிருந்து களமிறங்கிய நந்தன குணதிலக 3,44173 வாக்குகளைப்பெற்றிருந்தார் இதில் வாக்களிப்பு வீதம் 51.12 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஐந்தாவது தேர்தல் 2005-11-17ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச, ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 13 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

இதில் மஹிந்த ராஜபக்சவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மஹிந்த ராஜபக்ச 48,87152 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, ரணில் விக்கிரமசிங்க 47,0636 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார்.

இதில் வாக்களிப்பு வீதம் 73.73ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஆறாவது தேர்தல் 2010-01-26ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச,புதிய ஜனநாயகக்கட்சியிலிருந்து முன்னாள் இராணுவத்தளபதியான சரத் பொன்சேகா உள்ளிட்ட 22 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

இதில் மஹிந்த ராஜபக்சவுக்கும் சரத் பொன்சேகவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மஹிந்த ராஜபக்ச 60,15934 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, சரத் பொன்சேகா 41,73185 வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார்.

இதில் சுயேட்சையாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான எம்.கே. சிவாஜிலிங்கம் 9,662 வாக்குகளைப் பெற்றிருந்தார். இதில் வாக்களிப்பு வீதம்74.50 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான ஏழாவது தேர்தல் 2015-01-08ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக புதிய ஜனநாயக கட்சியிலிருந்து மைத்ரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பிலிருந்து மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட 19 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

இதில் மைத்ரிபால சிறிசேனவுக்கும் மஹிந்த ராஜபக்சவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் மைத்ரிபால சிறிசேன 62,17162 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, மஹிந்த ராஜபக்ச 57,68090வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் வாக்களிப்பு வீதம்81.52 ஆகப் பதிவானது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான எட்டாவது தேர்தல் 2019-11-16ஆம் திகதி நடைபெற்றது. இதில் ஜனாதிபதி வேட்பாளர்களாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளரான கோத்தபாய ராஜபக்ச, புதிய ஜனநாயகக் கட்சியிலிருந்து சஜித் பிரேமதாச,தேசிய மக்கள் சக்தியிலிருந்து அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட 34 வேட்பாளர்கள் களமிறங்கினர்.

இதில் கோட்டாபய ராஜபக்சவுக்கும் சஜித் பிரேமதசாவுக்கும் போட்டி ஏற்பட்ட நிலையில் கோத்தபாய ராஜபக்ச 69,24255 வாக்குகளைப்பெற்று வெற்றியடைய, பிரேமதாச 55,64239வாக்குகளைப்பெற்று தோல்வியடைந்தார். இதில் தேசிய மக்கள் சக்தியிலிருந்து போட்டியிட்ட அநுரகுமார திசாநாயக்க 4,18553 வாக்குகளையும் சுயேச்சையாக போட்டியிட்ட தமிழ் வேட்பாளரான எம்.கே.சிவாஜிலிங்கம் 12,256 வாக்குகளையும் பெற்றனர். இதில் வாக்களிப்பு வீதம்81.52 ஆகப் பதிவானது.

இவ்வாறு நடந்து முடிந்த 8 ஜனாதிபதித் தேர்தல்களில் ஒவ்வொரு தேர்தல்களில் போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திசாநாயக்க ஆகியோரே எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகவுள்ளதுடன் இவர்களுக்கிடையில்தான் கடும் போட்டியும் ஏற்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர ஏற்கனவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவரான முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவும் இம்முறை போட்டியிடவுள்ளதாக அறிவித்துள்ள நிலையில் இந்த ஜனாதிபதித்தேர்தல் ஏற்கனவே ஜனாதிபதித்தேர்தல்களில் தோல்வியடைந்த வேட்பாளர்களுக்கிடையிலான தேர்தலாகவே மாறியுள்ளது.

## கடிதங்கள்

### குடிநீருக்கு நெருக்கடி

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர்த் திட்டம் கடந்த மூன்று மாதங்களாக செயலிழந்து உள்ளமை தொடர்பாக அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என பொது மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள நீர்த் தாங்கியில் இருந்து அக்கராயன் மத்தி, மேற்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ள நிலையில் கடந்த மூன்று மாதங்களாக குடிநீர் இடை நிறுத்தப்பட்ட நிலையில் குடிநீரினை இழந்துள்ள 270 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு குடிநீரினை வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் குடிநீர் செயற்றிட்டம் செயற்படாமலே உள்ளது.

இக்குடிநீர்த் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம், பிரதேச சபை தற்போதைய நெருக்கடியினை கருத்திற்கொண்டு நடமாடும் நீர்த் தாங்கிகள் மூலம் குடிநீரினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என குடிநீரினை எதிர்கொண்டுள்ள மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.




நடராசா கிருஸ்ணகுமார்



# முன்பிள்ளை மாணவர்களின் கார்ட்டூன் மோகம்

போ.மெரினா சுதர்ஷினி
நான்காம் வருட கல்வியில்
நான்காம் வருட கல்வியில்
சிறப்புக்கற்கை மாணவி
கல்வி, பிள்ளை நலத்துறை
கிழக்கு பல்கலைக்கழகம்,

இன்றைய நவீன காலத்தில் மனிதர்களுக்கு கேடு விளைவிக்கின்ற ஏராளமான கண்டுபிடிப்புகள் புதிதாக உருவாக்கப்படுகின்றன. அதிலும் குறிப்பாக ஏகாதிபத்திய மேலை நாட்டவர்களால் தயார் செய்யப்பட்டு, ஊடுருவ செய்கின்ற கார்ட்டூன் சேனல்கள், வீடியோ கேம்கள், செல்ஃபோன்களில் செயலிகள் மூலமாக உருவாக்கப்படுகின்ற விளையாட்டு கேம்கள் இதுபோன்ற பலதரப்பட்ட முறைகளின் வாயிலாக பலதரப்பட்ட பாதிப்புகள் உலக அரங்கில் பரவுகின்றன.

இதுபோன்ற கேம்கள், கார்ட்டூன் சேனல்கள் வெறுமனே பிள்ளைகளின்பொழுதுபோக்கிற்காகத்தான் உருவாக்கப்பட்டுள்ளது என்று நம்மில் பலர் நினைத்துக் கொண்டு அதுபோன்ற காரியங்களை அனுமதித்து வருகின்றோம். ஆனால் குழந்தைகள், மாணவர்கள், இளைஞர்கள் இதுபோன்ற பருவத்தில் உள்ளவர்களின் வாழ்க்கையையும், சிந்தனைத் திறனையும் அழித்தொழிக்கின்றது. சமீப காலமாக மேலை நாட்டவர்களால் செல்ஃபோன் செயலிகள் மூலமாக பதிவேற்றம் செய்யப்பட்டு விளையாடக் கூடிய நூற்றுக்கணக்கான விளையாட்டுக்களை உலகம் முழுவதும் பரப்பி வெளியிடுகின்றார்கள்.

ஆனால் தயார் செய்யப்பட்டு வெளியிடுகின்ற விளையாட்டுக்களின் பாதிப்புகளையும், கேடுகளையும் அறியாமலும், உணராமலும் இருந்து வருகின்ற காரணத்தினால், இவற்றில் குறிப்பிட்ட சில விளையாட்டுக்கள் உலக அரங்கிலே மிகவும் பிரசித்தி பெற்ற விளையாட்டாகவும், மக்களிடத்தில் நல்ல வரவேற்பை பெற்ற விளையாட்டாகவும் வலம் வந்து கொண்டிருக்கின்றது.

உதாரணமாக, “ப்ளூ வேல்” என்ற விளையாட்டு ஆரம்பத்தில் மக்களிடத்தில் மிகவும் வேகமாக பரவினாலும், குறிப்பிட்ட சில நாட்களில் மனிதர்களின் உயிருக்கே மிகப்பெரும் ஆபத்தை விளைவிக்கின்ற விளையாட்டாக மாறி, உலக அரங்கில் பலர் செத்து மடிந்து, பெருமளவில் பிரச்சனைகளை கிளப்பி, தடை செய்யப்பட்ட விளையாட்டாக ஆனது. ஆனால் இந்த “ப்ளூ வேல்” விளையாட்டையெல்லாம் பின்னுக்கு தள்ளி விட்டு உலக அரங்கில் இளைஞர்களிடத்தில் ஆக்கிரமித்திருக்கின்ற ஒரு உயிர்க்கொல்லி விளையாட்டு தான் பப்ஜி. அப்படி என்ன தான் இருக்கின்றது? என்று கேட்டால், பல நபர்கள் கூட்டமாக சேர்ந்து ஒருவர் மற்றவரை சுட்டுத் தள்ளுகின்ற விளையாட்டு தான் ஆனால் மற்ற கேம்களை போலல்லாமல் பப்ஜி சுவாரஸ்யமான விளையாட்டு என்று தெரிவிக்கின்றனர்.

ஒரே நேரத்தில் பல நூறு பேர் உலகின் வெவ்வேறு இடங்களில் இருந்துகொண்டே இயர்போன் வழியாக ஒருவரை ஒருவர் தொடர்பு கொண்டு ஆன்லைன் வழியாக விளையாடும் விளையாட்டு பப்ஜியாகும். சிலர் ஆர்வக் கோளாறின் உச்சகட்டத்திற்கு சென்று, படிப்பதை மறந்து விட்டு மணிக்கணக்கில் பப்ஜி விளையாட்டில் மூழ்கி திளைக்கின்றனர்.

சுமார் 30 கோடி பேர் பப்ஜி விளையாட்டைப் பதிவிறக்கம் செய்துள்ளதாகவும், ஒரே நேரத்தில் உலகளவில் சுமார் 5 கோடி பேர் விளையாடி வருவதாகவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய விளையாட்டுக்கள் அதிகமானளவில் பிள்ளைகள் மத்தியில் உலா வந்துக்கொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. சிறு வயதில் பிள்ளைகளின் மனமானது முறையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் தான் அவர்களின் எதிர்கால கற்றல் செயற்பாடுகள் சிறப்பாக அமையும் எனலாம்.



**பிரதிகூலங்கள்**

- தனித்துவிடப்படுகின்ற நிலை உருவாகும்.
- உடல் உள விருத்தி பாதிப்படையும்
- மன அழுத்தம் ஏற்படும்
- தூக்கமின்மை
- முரண்பாடுகள் ஏற்படல்
- விரோதம் போன்ற குணங்கள் மனதளில் உருவாதல்
- கல்வியின் மீது ஈடுபாடின்மை

இத்தகைய நிலைப்பாடுகள் பிள்ளைகள் மத்தியில் ஏற்பட பிரதான காரணமாக இருப்பதே பெற்றோர்கள் என்றால் அது மிகையல்ல அந்த வகையில் பிள்ளைகளை சிறுவயதில் இருந்தே அவர்களுக்கு விருப்பமான விளையாட்டுக்களின் ஊடான கல்வி செயற்பாடுகளில் ஈடுபட வழிவகுத்து தர வேண்டும்.

கார்டூன்களிலும் இணைய விளையாட்டுக்களிலும் தமது நேரத்தை பிள்ளைகள் அதிகளவில் செலவழிப்பதற்கு அவை பிள்ளைகளை ஈர்ப்பதுடன் சுவாரஸ்யமாக அமைந்துள்ளமையே பிரதான விடயமாக பார்க்கப்படுகின்றது. அதனால் அவர்களை ஈர்க்கும் வகையில் அமைந்த முன்பள்ளி செயற்திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் ஏன் பாடசாலைக்கு செல்ல விரும்புவதில்லை என சிந்திக்க வேண்டும் பள்ளிகள் குழந்தைகளை என்ன செய்கின்றன என யோசிக்க வேண்டும்.

அதனை செயற்படுத்தி காட்டியவரே மரியா மாண்ட்டிசோரி ஆவார் நாம் மாண்ட்டிசோரி அல்லது நெர்ஸரி என்று அழைக்கும் இந்த ஆரம்பக் கல்வியை பாலர் கல்வி என்று விளக்கலாம். இதில் கல்வி முதன்மையாக இல்லை என்றாலும் கூட ஏதோ ஒன்றை தாம் விரும்பிய முறையில் கற்றுக்கொள்கிறோம் என்பதால் பாலர் கல்வி பிள்ளைகளை உருவாக்குவதில் பிரதான இடம் வகிக்கின்றது.

மரியா மாண்ட்டிசோரி இவர்தான் குழந்தைகளுக்கான மாண்ட்டிசோரி கல்வி முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். இலங்கைக்கு வந்து அதனை நிறுவியரும் அவரே என்றால் அது மிகையல்ல கல்வி சார்ந்த இத்தாலியில் ஐம்பது ஏழைப்பிள்ளைகளுக்கு கண்காணிப்பாளராக ஆரம்பத்தில் இருந்தார் மரியா. புத்தகங்களுக்கு பதில் பொம்மைகளை அவர்களின் கையில் கொடுத்தார்.

எழுத்துக்களை சொல்லித்தருவதற்கு முன்னர் அவற்றை உணர்கிற வகையில் பொருட்களை காட்டினார். வீட்டில் குழந்தைகள் வேலையே செய்ய விடக்கூடாது என்று இருந்த பொழுது எளிய செயல்களை செய்ய வைத்து பிள்ளைகளை சுறுசுறுப்பாக வைத்துக்கொண்டார்.

மாணவர்கள் ஆசிரியர்களை கவனிக்க வைக்க நாம் முயலக்கூடாது, ஆசிரியர் மாணவரை கவனித்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னவர் அப்படியே பிள்ளைகளை நடத்தினார். வண்ண அட்டைகள், ஒலி எழுப்பும் கருவிகள், ஓவியங்கள் என்று குழந்தைகளின் கற்றலை வண்ணமயமானதாக வகுப்புக்களை உருவாக்கினார்.

இன்று உலகம் முழுக்க 20 ஆயிரம் பள்ளிகள், 110 நாடுகள் என்று விரிந்திருக்கும் அவரின் கனவு முழுக்க முழுக்க குழந்தைகளுக்கானது. இந்த உலகப் புகழ்பெற்ற கல்வி முறை இலங்கைக்கு அறிமுகமாகி 74 ஆண்டுகள் ஆகின்றன.

மரியா மொண்டிசோரி குழந்தைகளுக்கான இந்தக் கல்விமுறையை இலங்கைக்கு வந்து அறிமுகப்படுத்திக் கொடுத்தார் என்பதுதான் இங்கே விசேடமாக குறித்துக் காட்டவேண்டிய விடயம். மாண்ட்டிசோரி கல்வி (Montessori education) என்பது ஒருவகை பயிற்றுவிப்பு முறையாகும்.

இத்தாலியைச் சேர்ந்த மருத்துவரும் கல்வியாளருமான மரியா மொண்டசோரியால் உருவாக்கப்பட்ட கல்வி முறையை உலகம் முழுவதுமாக சுமார் 20,0000 பள்ளிக்கூடங்கள் பின்பற்றுகின்றன.

மொண்டிசோரி கல்வி என்பது சுதந்திரத்தை வலியுறுத்தி, அச்சுதந்திரத்தை வரையறைக்குள் கொண்டுவந்து, குழந்தைகளின் இயல்பான உளவியல், உடல் மற்றும் சமூக வளர்ச்சியை மதிப்பதைக் குறிப்பதாக உள்ளது.

புலன்களுக்கான பயிற்சி மிக மிக அவசியம் என்றும் இவைகளே அறிவின் தொடக்க வாயில்கள் என்றும் எடுத்துரைத்தார். மாண்டிசோரி ‘சுதந்திரம்’ என்ற வார்த்தையை அதிக பயன்படுத்தக் காரணம், அக்காலத்தில் கட்டுப்பாடுகள் மூலம் மட்டுமே ஒழுக்கத்தை மாணவர்களிடம் கொண்டுவர முடியும் என்ற எண்ணம் இருந்ததே ஆகும்.

பிள்ளைகள் என்றுமே சுதந்திரமாக இருக்கவே விரும்புவார்கள் மற்றும் அவர்களை ஈர்க்கும் வகையில் அமையும் காட்சிகளை மீண்டும் செய்து பார்க்க ஆசைப்படுவார்கள் அதன் விளைவாகவே அவர்கள் கார்டூன்களுக்கு அடிமையாக்கப்படுவதுடன் அதில் வரும் கதாப்பாத்திரங்களை போலவே பேசிப் பழக எத்தணிக்கின்றனர்.

மாறாக பெற்றோர்கள் சிரமங்களை கருத்திற் கொண்டு தொலைக்காட்சி பார்க்கும் பழக்கத்தை பிள்ளைகள் மனதில் பதிய வைத்து விடுகின்றனர்.

இத்தகைய செயற்பாடுகளை தடுக்கும் முகமாகவே 1906 ஆம் ஆண்டில், மரியா மாண்ட்டிசோரி ஏ.எம்.ஐ அல்லது அசோசியேஷன் என்ற சர்வதேச மாண்ட்டிசோரி குழந்தை கல்வி முறையை அறிமுகப்படுத்தினார்.

வெள்ளிக்கிழமை தொடரும்...

மதுவால் சிதைந்த குடும்பம்

# “சந்தோஷங்க ரொம்ப சந்தோஷம்”



சாந்திஜொ



“ஆமா மங்களா. துபாய்க்கு வேலைக்கு போறதுக்கு விசா இவ்வளவு சீக்கிரம் கிடைக்கம்னு நான் நினைக்கல. வேலைக்கு சேர்ந்ததும் நான் அனுப்புற சம்பளத்துள கடனெல்லாம் முடிச்சிரு. இனி நான் உன்ன கஷ்டபடுத்த மாட்டேன். ஐஞ்சு வருஷத்துக்கு பிறகு திரும்ப நான் வரும்போது நம்ம நல்ல நிலைமல இருப்போம்” என்றான் அரவிந்தன்.

அரவிந்தன் கொழும்பில் காய்கறி மார்க்கெட்டில் தினக்கூலி வேலைக்கு செல்பவன். ஒவ்வொரு நாளும் கிடைக்கும் மூவாயிரத்து ஐந்நூறு சம்பள பணத்தில் வீட்டு செலவுக்கு 2500 கொடுப்பான். மீதி 1000 பணத்தை குடிப்பதற்கு செலவு செய்வான். குடித்துவிட்டு தவறாது மனைவி மங்களாவிடம் இனி குடிக்கமாட்டேன் என சத்தியமும் செய்வான்.

நாட்டில் உணவுப் பொருட்களின் விலைகள் மக்களுக்கு மாரடைப்பை வரவழைக்கும் அளவிற்கு உயர்ந்ததை எண்ணி வருத்தப்படதாவன் மதுபானங்களின் விலை உயர்வை கண்டித்து ஒருநாள் 2500க்கு குடித்து தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினான்.

வைன் ஸ்டோர் வாசலில் நின்று குடித்தற்காக பொலிஸ் அவனைப் பிடித்து 1 நாள் சிறையில் வைத்து அனுப்பியது. பிறகு சம்பள குறைவு போன்ற காரணங்களால் குடியை கொஞ்சமாக குறைத்துக் கொண்டான்.

இப்படியே சென்றால் பிழைப்பது கஷ்டம் என்பதை புரிந்து கொண்ட மங்களா, அவன் குடியை முழுவதுமாக விடவும் வேலை செய்யவும் வேண்டி அவனை டுபாய்க்கு அனுப்ப தெரிந்தவர்களிடம் கடன் வாங்கி ஏற்பாடு செய்தாள்.

வெளிநாட்டு முகவரிடம் தனது பாஸ்போர்ட், பயண டிக்கெட் ஆகியவற்றை வாங்குவதற்காக சென்று வீடு திரும்பினான் அரவிந்தன். மங்களாவின் முகத்தில் நிலவிய பதற்றத்தை கண்டு எதுவும் கேட்காமல் அவளே சொல்லும் வரை காத்திருந்தான்.

“என்னங்க கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி மாலா கோல் பண்ணிருந்தா”

“மாலாவா, அவ ஏன் கோல் பண்ண”

“அதுவந்து...ம்... உங்க அம்மம்மா சுகமில்லாம ஆஸ்பிட்டல அட்மிட் பண்ணிருக்காங்கலாம். ரொம்ப சீரியஸான நிலைமல இருக்காங்களாம். உங்கள வந்து பார்த்துட்டு போக சொன்ன மாலா”

“அதுதான் பேரன் வேணாணு பேத்திக்கே எல்லாம் சொத்தையும் வைச்சிக்க கொடுத்தாங்களே இப்ப மட்டும் நான் போய் ஏன் பார்க்கணும்”.

“இப்படி பேசாதீங்க. நம்மளுக்கு கல்யாணமாகி பிள்ள பிறந்து ஐஞ்சு வருஷமாச்சி. நம்ம பிள்ளைய அவங்க பார்த்தது கூட இல்ல. என்னா தான் இருந்தாலும் அவங்க வயசுல பெரியவங்க. இந்த நேரத்துல நீங்க வீம்பு பிடிக்காம பிள்ளையையும் கூட்டிட்டு போய்ட்டு பார்த்துட்டு வாங்க” என்றாள் மங்களா.

அரவிந்தன், “நான் எதுக்கு போய் அவங்கள பார்க்கணும். நான் தப்பு செஞ்சேன் தான். அதுக்குனு.... வேணா மங்களா பழச ஞாபகப்படுத்தாத. நான் வேலைக்கு டுபாய் போறத நினைச்சி நீ சந்தோஷப்படுற. நான் குடிய முழுச விடுறதுக்கும் ஒரு புது சூழ்நிலைக்கு மாற போறதையும் நினைச்சி சந்தோஷப்படுறேன்”என்றான்.

அரவிந்தனனின் அப்பாவும் அம்மாவும் விபத்து ஒன்றில் இறந்துப்போன போது அவனுக்கு வயது பத்து. அவனது தங்கை மாலா கைக்குழந்தை. அந்நேரத்தில் இவர்களை அன்போடு அரவணைத்து பாதுகாத்தது இவர்களுடைய அம்மம்மா பாலம்மா மட்டும் தான். சமையல்காரியாக வேலை செய்து சம்பாதித்த பணத்தில் மாலாவை நல்ல இடத்தில் கட்டி கொடுத்தும் அரவிந்தனை கல்லூரி படிப்பு வரையும் படிக்க வைத்தார்.

போக வேண்டாம் என்று எவ்வளவு சொல்லியும் கேட்காமல் குடிப்போதையில் இருந்த மாப்பிள்ளை தனது மகளை பைக்கில் வலுக்கட்டாயமாக அழைத்து சென்ற போது ஏற்பட்ட விபத்தில் இருவரையும் பலிக்கொடுத்த பாலம்மாவுக்கு குடி என்ற வார்த்தையை கேட்டாலே உடம்பலாம் நடுங்கும்.

தந்தை போலவே குடியை அரவிந்தனும் பழகக் கூடாது என்பதற்காக அவனை மிகவும் கவனத்துடனும் அவனது தந்தையால் தனது மகளும் விபத்தில் இறந்ததை சொல்லிச் சொல்லியும் வளர்த்தாள். அப்படி வளர்க்கப்பட்ட அரவிந்தன்

பழகக் கூடாதவர்களோடு பழக்கம் ஏற்படத் தொடங்கி குடிக்க தொடங்கினான். மனம் நொந்த பாலம்மா திருத்துவதற்கான முயற்சிகள் அனைத்தும் அவனிடத்தில் பலிக்காத பிறகு அவனை வீட்டை விட்டு விரட்டியடித்தாள்.

கல்லூரியில் படித்து கொண்டிருந்த போதே அவனை காதலித்த மங்களா “அரவிந்தனை நான் திருத்துவேன். அவரு குடிய முழுச விடுவாறு” என்று சவால் விட்டு கல்யாணம் செய்து கொண்டாள். ஐந்து வருடங்கள் ஆகியும் சவாலில் வெற்றி பெற முடியவில்லை. இதில் அவள் தற்போது எய்தியுள்ள அம்பு தான் அரவிந்தனை வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்பும் முயற்சி.

புதிய சிந்தனையும் கடின உழைப்பும் அவன் மனதை முற்றிலும் மாற்றிவிடும் என்ற நம்பிக்கையில் அவனை அனுப்புகிறாள்.

இரு நாட்களுக்கு பிறகு விமான நிலையத்திற்கு புறப்பட்டு கொண்டிருந்த அரவிந்தனுக்கு அப்பொழுது மாலா அழுதவாறே சொன்ன செய்தி உருக்குலைய செய்தது.

“அண்ணா அம்மம்மா இறந்துட்டாங்க”. தலையில் கை வைத்து அம்மம்மா என்று கதறி அழ தொடங்கிய அரவிந்தனை சமாதானப்படுத்தினாள் மங்களா.

“குடிய முழுச விடுறது தான் உங்க அம்மம்மாக்கு நீங்க கொடுக்குற மரியாத. அப்போ தான் அவுங்க ஆத்மா சாந்தியடையும்” என்று ஆறுதல் சொல்லி அவனுடைய கண்ணீரைத் துடைத்தாள்.

அரவிந்தன் டுபாய்க்கு சென்ற ஒரு வாரத்திற்கு பிறகு அம்மம்மாவினுடைய கருமக்காரியங்களை முடித்த மாலா மங்களாவை பார்க்க வீட்டிற்கு வந்தாள்.

“அண்ணி, அம்மம்மாவ கடைசி வரைக்கும் அண்ணா வந்து பார்க்கலனு கவலப்படல. அவரு குடிய முழுச விடனும் திருந்தனும்னு தான் ஆசப்பட்டாங்க. அண்ணா டுபாய் போறத நினச்சி சந்தோஷப்பட்டாங்க. இந்த கவர அம்மம்மா உங்க கிட்ட கொடுக்க சொன்னாங்க” மங்களா அந்த கவரை பிரித்து பார்த்தாள். அதில் ஒரு கடிதமும், வீட்டு பத்திரமும் இருந்தது. கடிதத்தில் என் அன்பு பேரன் அரவிந்தனின் மனைவி மங்களாவுக்கு,“கொஞ்ச நேர கிடைக்கிற அற்ப சந்தோஷத்துக்காக அவன் குடிக்கிற குடி அவன மட்டும் இல்ல அவன சுத்தியுள்ளவங்களையும் பாதிக்குதுனுங்குறத ஏன் அவன் உணரல. குடியினால தான் அவங்க அப்பா விபத்துல இறந்தாரு. அவரோட என் மகளும் இறந்தா. உங்களோட பிள்ளைகளுக்கும் அந்த நிலம வரக்கூடாது.

அவன் வெளிநாட்டுக்கு வேலைக்கு போக போறானு கேள்விப்பட்டேன். நல்லது. இந்த பயணம் அவன நிச்சயம் திருத்தும். என்னோட வீட்ட அவன் பெயர்ல எழுதி இருக்கேன். அவன் திருந்தி ஒழுங்க வந்தால் அவனுக்கு இத சொல்லுங்க. சந்தோஷமா வாழுங்க. குடிய அவன் முழுச விடணும். எனக்கு அதுபோதும்” அவனோட அம்மம்மா, பாலம்மா.

அரவிந்தனுக்கு வீடு தன் பெயரில் எழுதப்பட்டிருப்பதை பற்றி சொன்னால் வேலைக்கு போன இடத்தில் ஏதாவது பொய் சொல்லி திரும்பி விடுவான் என்பதை உணர்ந்த மங்களா அவன் திருந்தி வர வேண்டும் என்ற நோக்கத்தோடு அதை தற்போது அவனிடம் சொல்லாது மறைத்தாள். அம்மம்மாவின் வீடும் அவன் வரும் வரை காத்திருக்கிறது. குடியால் தான் மட்டுமில்லாமல் மற்றவர்களுக்கும் துன்பத்தை கொடுக்கும் பல அரவிந்தர்களும், அவர்களை திருத்த பாடுபடும் பாலம்மாக்களும், மங்களாக்களும் இன்னும் இங்கு போராடிக் கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஹைதராபாத்

## விருந்து கொடுத்ததால்
# இளம்பெண் வன்புணர்வு

ஹைதராபாத்தில், 24 வயதான பெண் ஒருவர், தனக்கு வேலை கிடைத்ததற்காக தனது நண்பர்களுக்கு விருந்து கொடுத்த போது அவரின் பால்ய நண்பனாலேயே கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹைதராபாத்தில் கடந்த 29ஆம் திகதி இரவு, 24 வயது மென்பொருள் ஊழியர் தனக்கு வேலை கிடைத்ததை கொண்டாடும் வகையில், தனது நண்பர்களை அழைத்துக் கொண்டு வனஸ்தலிபுரத்தில் அமைந்துள்ள ஹோட்டலில் உணவு அருந்த சென்றுள்ளார்.

இவருடன், ஒரு பெண் மற்றும் 2 ஆம் வகுப்பிலிருந்து தோழனாக இருக்கும் 24 வயதுடைய ஆண் ஒருவரும் வந்துள்ளனர்.

இந்நிலையில், உணவு அருந்திய இவர்கள், அளவுக்கு அதிகமாக மது அருந்தி விட்டு அங்கிருந்த ஹோட்டலிலேயே தங்கலாம் என்று முடிவு செய்து, அங்கேயே தங்கியுள்ளனர்.

அப்போது, குறித்த பெண் தனது சிறுவயது ஆண் நண்பராலேயே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார். பிறகு, அந்த நபர் தனது நண்பரையும் அழைத்து, இப்பெண்ணை கூட்டு பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்.

இதனையடுத்து அப்பெண், தனது சகோதரரை அழைத்து நடந்ததை தெரிவித்துள்ளார். பின்னர் சம்பவ இடத்துக்கு விரைந்த அவர், இப்பெண்ணை அங்கிருந்து மீட்டுள்ளார்.

இதுகுறித்து பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்ட நிலையில், பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேபோல, 26 வயதான பெண் ஒருவரும் தெலுங்கானாவிலிருந்து ஆந்திராவிற்கு பேருந்தில் சென்று கொண்டிருந்தபோது, பேருந்து ஓட்டுநராலேயே பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

புனே

## சிறுவனை 14 ஆவது மாடியிலிருந்து
# குதிக்க வைத்த இணைய விளையாட்டு

இணையவழி விளையாட்டுக்கு அடிமையான 16 வயது சிறுவன் அந்த விளையாட்டின் டாஸ்கை செய்து முடிப்பதற்காக தனது வீட்டின் 14ஆம் தளத்திலிருந்து விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புனேவைச் சேர்ந்த பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவன், வெகு நாட்களாக ஒன்லைன் கேம் விளையாடுவதில் மிகவும் நாட்டம் கொண்டுள்ளார்.

இந்தநாட்டம், நாள் ஆக ஆக, ஒன்லைன் விளையாட்டுக்கு இவரை அடிமையாக மாற்றியதாகவும், அவரின் செயல்களில் ஒரு சில விசித்திர மாற்றங்கள் தென்பட்டதாகவும் சிறுவனின்



பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, கடந்த 26ஆம் திகதி அதிகாலை 12.30 மணி அளவில், சிறுவன் தனது வீட்டின் 14 ஆவது தளத்தில் இருந்து கீழே குதித்து மரணம் அடைந்துள்ளார்.

இதனையடுத்து, பெற்றோர்கள் அளித்த தகவலின் பேரில், சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இவரின் அறையை நன்கு சோதனையிட்டதில், அவரது அறையிலிருந்து இரண்டு ஓவியங்கள் மற்றும் குறிப்பு ஒன்றை கண்டெடுத்துள்ளனர். அந்த ஓவியத்தில், அவரது அறை மற்றும் அவர் தங்கியிருக்கும் வீட்டின் கட்டிடம் ஆகியவை ஓவியமாக்கப் பட்டிருந்தது.

மேலும், அந்த ஓவியத்தில் பெல்கனி வரைந்திருந்த இடத்தில் 'ஜம்ப்'(Jump) என்று எழுதப்பட்டிப்பதை கண்ட பொலிஸார் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இந்நிலையில், சிறுவன் விளையாடிய விளையாட்டில் மாடியிலியிருந்து குதிக்க சொல்லி கொடுக்கப்பட்ட டாஸ்க்கால் தான், அவர் இவ்வாறு குதித்து உயிரிழந்தார் என பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

நீலகிரி

## வயநாடு கோரத்தில்
# 9 தமிழர்கள் பலி



வயநாடு நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் உட்பட 9 தமிழர்கள் உயிரிழந்துள்ளனர்.

முண்டக்கை, சூரல்மலை, மேப்பாடி ஆகிய இடங்களில் கடந்த 30ஆம் திகதி அதிகாலை இடம்பெற்ற பெரும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 200-ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலச்சரிவில் நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த காளிதாஸ் என்பவரின் உடல் அவரது சொந்த ஊரான கூடலூர் அருகே குழியம்பாறைக்கு கொண்டுவரப்பட்டது. 32 வயதான இவர் 4 மாதங்களாக கேரளாவுக்கு கட்டிட வேலைக்கு சென்றிருந்த நிலையில் எதிர்பாராத விதமாக நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தார்.

இதே போல் வயநாட்டின் சூரல்மலை கிராமத்தில் உள்ள சிவன் கோவிலில் அர்ச்சகராக இருந்த கல்யாண குமாரின் உடலும் அவரது சொந்த ஊரான பந்தலூர் அடுத்துள்ள ஐயன்பள்ளிக்கு கொண்டுவரப்பட்டது.

நிலச்சரிவில் சூரன்மலை சிவன் கோவில் மண்ணில் புதைந்த போது கல்யாண குமார் பாறையின் இடுக்கில் சிக்கி உயிரிழந்தார்.

மேலும், நீலகிரி மாவட்டம் பந்தலூரைச் சேர்ந்த ஷிஹாப் என்பவர் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளார். சூரல்மலை பகுதியில் உள்ள பள்ளி வாசலில் ஷிஹாப் மத ஆசிரியராக பணியாற்றி வந்த நிலையில், நிலச்சரிவு, வெள்ளப்பெருக்கில் பள்ளிவாசல் முழுவதுமாக அடித்துச் செல்லப்பட்டதில் ஷிஹாப் உயிரிழந்தார்.

இதைத் தொடர்ந்து, சூரல்மலையில் தேயிலை தோட்டத்தில் பணிபுரிந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 தமிழர்கள் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்த 6 பேரும் கோவை மாவட்டம் வால்பாறையைச் சேர்ந்தவர்கள் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், வயநாடு நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை 9ஆக உயர்ந்துள்ளது.

டெஹ்ரான்

## ஹமாஸ் இயக்கத் தலைவர்
# படுகொலை



ஈரான் தலைநகர் டெஹ்ரானில் ஹமாஸ் இயக்கத் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டார்.

ஈரான் ஜனாதிபதி பதவியேற்பு விழாவில் பங்கேற்பதற்காக சென்றிருந்த போதே, அவர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் அமைப்பு அறிவித்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகின்ற நிலையில், இந்த போரில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்து 258 ஆக உயர்ந்துள்ளது.

இதுவரை 90 ஆயிரத்து 589க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள நிலையில், தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

குறிப்பாக பலஸ்தீன போராளிகளைக் குறிவைத்து இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்து 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே, இஸ்மாயில் ஹனியே கடந்த 2017 முதல் ஹமாஸின் தலைவராக இருந்து வருகிறார். தற்போது ஹமாஸின் அரசியல் பணியகத்தின் தலைவராக பணியாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில், ஈரானின் புதிய ஜனாதிபதியாக தெரிவான மசூத் பெசெஷ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க சென்றிருந்த நிலையில், தெஹ்ரானில் அவர் தங்கியிருந்த வீட்டை குறிவைத்து இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியன.

இதில் ஹனியே மற்றும் அவரது பாதுகாவலர் என 2 பேர் படுகொலை செய்யப்பட்டனர். ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல் படை இந்த தகவலை உறுதிப்படுத்தி உள்ளதாக ஈரான் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ரஷ்யா

## திருமணம் ஆகாமலேயே
# 100 குழந்தைகளுக்கு தந்தை

"நூற்றுக்கும் மேற்பட்ட தம்பதிகள் குழந்தை பெற எனது விந்தணுக்களை தானம் செய்து உதவியுள்ளேன்" என இன்னும் திருமணமாகாத டெலிகிராம் நிறுவனத்தின் இணை நிறுவனர் பாவெல் துரோவ் (Pavel Durov) தெரிவித்துள்ளர்.

ரஷ்ய நாட்டைச் சேர்ந்த 39 வயதாகும் பாவெல் துரோவ் இன்னும் திருமணம் செய்து கொள்ளாத நிலையில் 12 வெவ்வேறு நாடுகளில் உள்ள 100க்கும் மேற்பட்ட குழந்தைகளின் உயிரியல்



தந்தையாக தான் உள்ளதாக தெரிவித்து அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளார்.




# இலங்கையை வெள்ளையடித்த இந்தியா

இருபதுக்கு- 20 சர்வதேசப் போட்டித் தொடரில் இலங்கையை இந்தியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே தோற்றிருந்த இலங்கை, பல்லேகலவில் செவ்வாய்க்கிழமை (30) நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் தோற்றமையைத் தொடர்ந்தே 3-0 என இந்தியாவால் வெள்ளையடிக்கப்பட்டுள்ளது.


இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் சரித் அசலங்க, இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார். இலங்கை சார்பாக சகலதுறைவீரரான சமிந்து விக்ரமசிங்க அறிமுகத்தை மேற்கொண்டார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, மகேஷ் தீக்‌ஷன (3), விக்ரமசிங்க, அசித பெர்ணாண்டோ, ரமேஷ் மெண்டிஸ், வனிது ஹசரங்கவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் ஷுப்மன் கில் 39 (37), ரியான் பராக் 26 (18), வொஷிங்டன் சுந்தர் 25 (18) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்கவின் 26 (27), குசல் மெண்டிஸின் 43 (41), குசல் பெரேராவின் 46 (34) ஓட்டங்களுடன் வெற்றியிலக்கை நோக்கி நகர்ந்து 15.1 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 110 ஓட்டங்களுடன் காணப்பட்டபோதும் அடுத்த 27 ஓட்டங்களைச் சேகரிப்பதற்குள் 7 விக்கெட்டுகளை இழந்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 137 ஓட்டங்களையே பெற்று சுப்பர் ஓவருக்கு போட்டி முடிவு சென்றது. பந்துவீச்சில் ரவி பிஷ்னோய், சுந்தர், ரிங்கு சிங், அணித்தலைவர் சூரியகுமார் யாதவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில் சுந்தர் வீசிய சுப்பர் ஓவரில் குசல் பெரேரா, நிஸங்க ஆட்டமிழக்க நான்கு பந்துகளையே எதிர்கொள்ள முடிந்த நிலையில் இரண்டு ஓட்டங்களையே பெற்றது. அந்தவகையில் மூன்று ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு களமிறங்கிய சூரியகுமார் யாதவ் தீக்‌ஷனவின் முதல் பந்திலேயே நான்கு ஓட்டங்களைப் பெற இந்தியா வென்றது.

இப்போட்டியின் நாயகனாக சுந்தர் தெரிவானார்.



## பரிஸ் 2024: ஐ. அமெரிக்காவுக்கு
# தங்கம் வென்று கொடுத்த பைல்ஸ்

கடந்த மூன்றாண்டுகளுக்கு முன்னர் உளப் பிரச்சினைகள் காரணமாக2020டோக்கியோ ஒலிம்பிக்கில் விலகியிருந்த ஐக்கிய அமெரிக்காவின் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை சிமோனே பைல்ஸ், தனது அபார திறமை மூலம் பரிஸ் 2024ஆம் ஆண்டு போட்டிகளில் ஐக்கிய அமெரிக்க அணிக்கு முதலாவது தங்கத்தை வென்று கொடுத்துள்ளார். ரியோ 2016-இல் 27 வயதான பைல்ஸ் வென்ற நான்கு தங்கப் பதக்கங்களுடன் இது ஐந்தாவது தங்கப் பதக்கமாகும்.

இந்நிலையில் பதக்கப் பட்டியலில் 7 தங்கம், 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் முதலாமிடத்தில் ஜப்பான் உள்ளது. 6 தங்கம், 9 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களுடன் இரண்டாமிடத்தில் பிரான்ஸும், 6 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தில் சீனாவும், 6 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கத்துடன் நான்காமிடத்தில் அவுஸ்திரேலியாவும் காணப்படுகின்றன. 5 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களுடன் ஐந்தாமிடத்தில் காணப்படுகின்றது.

## இந்தியாவுக்கெதிரான தொடரில்
# இலங்கைக் குழாமில் நிஷான் மதுஷ்க

இந்தியாவுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் துடுப்பாட்ட வீரர் நிஷான் மதுஷ்க இடம்பெற்றுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டுள்ள 24 வயதான மதுஷ்க, ஒருநாள் சர்வதேசப் போட்டிக் குழாமில் இடம்பெறுவது இதுவே முதற்தடவையாகும்.

இந்நிலையில் அணித்தலைவராக குசல் மெண்டிஸை சரித் அசலங்க பிரதியிட்டுள்ளார்.

தவிர, இறுதியாக இலங்கை விளையாடிய பங்களாதேஷுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் இடம்பெற்ற பிரமோத் மதுஷன், லஹிரு குமார ஆகியோர் இம்முறை குழாமில் இடம்பெறாத நிலையில் மதீஷ பத்திரண, அசித பெர்ணாண்டோ ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: சரித் அசலங்க (அணித்தலைவர்), பதும் நிஸங்க, அவிஷ்க பெர்ணாண்டோ, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்கிரம, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, நிஷான் மதுஷ்க, வனிது ஹசரங்க, டுனித் வெல்லலாகே, சாமிக கருணாரத்ன, மகேஷ் தீக்‌ஷன, அகில தனஞ்சய, டில்ஷான் மதுஷங்க, மதீஷ பத்திரண, அசித பெர்ணாண்டோ.



## புத்தளம் கரைத்தீவு கரப்பந்தாட்டத் தொடர்:
# டோக்கியோ சுப்பர் சிக்ஸ் சம்பியன்

■ எம்.யூ.எம். சனூன்

புத்தளம் கரைத்தீவு பொன்பரப்பியில் நடைபெற்ற சுப்பர் லீக் கரப்பந்தாட்டத் தொடரில் டோக்கியோ சுப்பர் சிக்ஸ் அணி சம்பியனானது.

மூன்று நாள்களாக நடைபெற்ற பொன்பரப்பி சுப்பர் லீக் (பி.எஸ்.எல்) எனும் எனும் இத்தொடரின் இறுதிப் போட்டியானது கரைத்தீவு கரப்பந்தாட்ட மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (28) இடம்பெற்றபோது வொலி விக்கிங் அணியை வென்றே டோக்கியோ சுப்பர் சிக்ஸ் சம்பியனாகியிருந்தது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 01, ஆகஸ்ட் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.